செ.வெ.எண்: 195 நாள்: 20.03.2018

திருநெல்வேலியில் தூய்மை பாரத இயக்கம் சார்பில் கழிப்பறை தொடர் பயன்பாடு குறித்து அங்கன்வாடி பணியாளர்களுக்கான வட்டார அளவிலான புத்தாக்க பயிற்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தூய்மை பாரத இயக்கத்தில் சிறந்த சேவையாற்றிய அங்கன்வாடி பணியாளர்களுக்கு தூய்மை பாரத இயக்க வீராங்கனை சான்றிதழ்களை வழங்கினார்.

-----------------------------------------------

திருநெல்வேலி பாளையங்கோட்டை மாநகராட்சி திருமண மண்டபத்தில் தூய்மை பாரத இயக்கம் சார்பில் கழிப்பறை தொடர் பயன்பாடு குறித்து அங்கன்வாடி பணியாளர்களுக்கான பாளையங்கோட்டை வட்டார அளவிலான புத்தாக்க பயிற்சி இன்று (20.03.2018) நடைபெற்றது. இப்பயிற்சி கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு தூய்மை பாரத இயக்கத்தில் சிறந்த சேவையாற்றிய அங்கன்வாடி பணியாளர்களுக்கு தூய்மை பாரத இயக்க வீராங்கனை சான்றிதழ்களை வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து 19 ஊராட்சி ஒன்றியங்களில் இன்று தூய்மை பாரத இயக்கம் சார்பில் கழிப்பறை தொடர் பயன்பாடு குறித்து அங்கன்வாடி பணியாளர்களுக்கான வட்டார அளவிலான புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் திறந்து வெளி கழிப்பிடம் இல்லாத மாவட்டமாக இந்த ஆண்டு ஜனவரி மாதம் அறிவிக்கப்பட்டது. அதற்கு முன்னதாக கடந்த ஆண்டு 5 மாத காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 1 லட்சத்தி 10 ஆயிரம் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தனிநபர் இல்ல கழிப்பறை இல்லாத பகுதிகளில் பொது கழிப்பறைகள் உள்ளது. கழிப்பறைகனை தொடர்ந்து பயன்படுத்தும் பழக்கத்தினை ஏற்படுத்த வேண்டும். அங்கன்வாடி பணியாளர்களாகிய நீங்கள் பொது மக்கள் மற்றும் கர்ப்பிணி பெண்கள்,தாய்மர்களுடன் தொடர்ந்து தொடர்பில் உள்ளீர்கள் திறந்து வெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் நோய்கள் குறித்து கர்ப்பிணி பெண்கள்,தாய்மார்கள்,குழந்தைகளிடம் அங்கன்வாடி பணியாளர் எடுத்துரைக்க வேண்டும். கழிப்பறை பயன்படுத்துவதை குழந்தைகளிடம் அடிப்படை பழக்கமாக கொண்டு வர வேண்டும். கழிப்பறை உபயோகப்படுத்தல் தூய்மை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கழிப்பறைகள் இல்லாத வீடுகளில் கழிப்பறைகள் கட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும் அங்கன்வாடி பகுதியில் உள்ள கழிப்பறை சுத்தமாகவும் சுகாதார முறையில் பராமரிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

தொடர்ந்து தூய்மை பாரத இயக்கத்தில் பாளையங்கோட்டை ஒன்றியத்தில் செயலாக்கத்துடன் சேவையாற்றிய அங்கன்வாடி பணியாளர்களுக்கு தூய்மை பாரத இயக்க வீராங்கனை சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.பழனி,தூய்மை பாரத இயக்க அலுவலர் திரு.சங்கர், பாளையங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. பாலசுப்பிரமணியம், திருமதி ஆறுமுகக்கனி, திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனை தாய்சேய் நல மருத்துவர் மரு.திருமதி. வாணி,ஊரக வளர்ச்சி முகமை திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.கோவிந்தன் மற்றும் அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி